நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 22.08.2022
---------------------------

<u>சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக் கூட்டம் அறிவிப்பு</u>

<u>கூட்டம் எண். 4</u>

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் ஆவணி 09 ஆம் நாள் 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25.08.2022ம் தேதியன்று வியாழக்கிழமை மதியம் 4.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

நகர்மன்றத் தலைவர்
சாத்தூர் நகராட்சி.

<u>பொருள் எண்: 1</u>

சாத்தூர் நகராட்சியில் 2021–2022–ம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேலக்காந்தி நகர் வெள்ளக்கரை சாலையில் உள்ள அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள் கழிப்பறை மற்றும் நீர்மாலை தொட்டி அமைத்தல் பணி மேற்கொள்ளுவதற்கு 19.05.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.ஞானசேகரன் | – | மதிப்பீட்டை விட 0.003% குறைவு |
| 2. | திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் | – | மதிப்பீட்டை விட 0.001% குறைவு |

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.ஞானசேகரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.06/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 68, நாள்: 25.08.2022**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 2**

சாத்தூர் நகராட்சியில் **2021–2022–**ம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பெரியார் நகர் பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள பூங்காவில் நடைபாதை **(95.58mx2.0m)** அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் அமைத்தல் மற்றும் பூங்கா மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ளுவதற்கு **19.05.2022–**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **1.** | திரு.பி.சுப்பாராஜ் | – | மதிப்பீட்டை விட **0.001**% குறைவு |
| **2.** | திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் | – | மதிப்பீட்டை விட **0.006**% குறைவு |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.06/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 69, நாள்: 25.08.2022**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 3**

சாத்தூர் நகராட்சியில் **2022–23–**க்கு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள Liquid Chlorination plant க்கு Liquid சப்ளை செய்யும் பணி மற்றும் Liquid Chlorination plant –ல் பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிக்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. **9.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 389/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 70, நாள்: 25.08.2022**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 4**

சாத்தூர் நகராட்சியில் **2021–2022–**ம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அக்வா அரினா எதிரில் உள்ள பெரியார் நகர் பூங்காவில் **(95.58mx2.0m)** நடைபாதை அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் உடற்பயிற்சி உபகரணங்கள் அமைத்தல் மற்றும் பூங்கா மேம்படுத்தப்படுதல் பணி மேற்கொள்ளுவதற்கு **31.05.2022–**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு. ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் – மதிப்பீட்டை விட 0.004% குறைவு
2. திரு.பி.சுப்பாராஜ் – மதிப்பீட்டை விட 0.002% குறைவு

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.06/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 71, நாள்: 25.08.2022**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 5**

சாத்தூர் நகராட்சியில் 2021–2022–ம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் குருலிங்காபுரம் பூங்காவில் நடைபாதை (95.58mx2.0m) அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கு 31.05.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு. ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் – மதிப்பீட்டை விட 0.004% குறைவு
2. திரு.பி.சுப்பாராஜ் – மதிப்பீட்டை விட 0.002% குறைவு

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.06/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 72, நாள்: 25.08.2022**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 6**

சாத்தூர் நகராட்சிக்கு 2022–23–ம் ஆண்டிற்கு குடிநீர் விநியோகத்திற்கு தேவையான லிக்யூடு குளோரின் சப்ளை செய்ய 15.07.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. M/s.Sri Sabari Engineering – மதிப்பீட்டை விட 0.58% குறைவு
2. M/s. Rajaganpathi Engineering Works – மதிப்பீட்டு விகிதத்திற்குள்ளே

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Sri Sabari Engineering ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி

குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.389/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 73, நாள்: 25.08.2022**
**தீர்மானம் : மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 7**

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட இருக்கண்குடி டேம்பில் உள்ள தெற்கு பகுதியில் உள்ள உறைகிணறு Unit–II 12.5 HP Sub Motor மற்றும் வடக்கு பகுதியில் உள்ள உறைகிணறு Unit–I 7.5 HP Sub Motor பழுது ஏற்பட்டுள்ளது. அதனை பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளவும் அதற்கு தேவையான சாமான்களை வாங்கவும் ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.72000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 587/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 74, நாள்: 25.08.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 8**

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட பைபாஸ் டேங்கில் உள்ள 25 HP Horizontal Split Cosing Pump Sub Motor பழுது ஏற்பட்டுள்ளது. இதனால் குடிநீர் விநியோகம் சீராக செய்ய இயலவில்லை. பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.53000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 581/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 75, நாள்: 25.08.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 9**

சாத்தூர் நகராட்சி கீழ்க்கண்ட பகுதிகளில் குடிநீர் சரிவர கிடைக்காததால் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் வாழ்வு அமைக்கும் பணி மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தே செலவு தொகை ரூ.230000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **1.** வார்டு **5** – குலாளர் தெருவில் 90mm PVC | – | **135** மீட்டர் |
| **2.**வார்டு **12** – SVN தோட்டம் தெருவில் 90mm PVC | – | **180** மீட்டர் |
| **3.**வார்டு **18** – நென்மேனி ரோடு 90mm PVC | – | **540** மீட்டர் |

4.வார்டு 13 – காட்டுத் தெருவில் 110mm PVC – 60 மீட்டர்

5.வார்டு 13 – காட்டுத் தெருவில் 250 கிளாம் செட் – 1 எண்ணம்

6.வார்டு 12 – SVN தோட்டம் தெருவில் 110mm Sulice Valve – 1 எண்ணம்

<u>அலுவலக குறிப்பு:</u>

மேற்கண்ட பணியினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.605/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 76, நாள்: 25.08.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 10</u>

சாத்தூர் நகராட்சியில் நடைபெறும் திட்ட பணிகளுக்கு ஓராண்டு சாதனை மலரில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு சட்டமன்ற உறுப்பினா் மற்றும் 15 வது நிதிக்குழு மூலம் எடுத்து செய்யப்பட்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டவைக்கு கீழ்க்கண்டபடி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. தீக்கதிர் – ரூ.9,500/–
2. தினகரன் – ரூ.15,960/–

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 202/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 77, நாள்: 25.08.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 11</u>

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஜெட்ராய்டு வாகனம் TN 67 BK 1057 வண்டியில் பயன்படுத்தப்பட்டு வந்த பேட்டரி முற்றிலும் செயல் இழந்து விட்டதால் புதிய பேட்டரினை ரூ.13200/–க்கு வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.602/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 78, நாள்: 25.08.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 12</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகன எண்.TN67AJ 6058 வாகனத்திற்கு தகுதிச்சான்று 30.09.2022ம் தேதியுடன் முடிவடைகிறது. அதனை 01.10.2022 முதல் தகுதிச்சான்று

பெற வாகனத்தில் உள்ள பழுது வேலைகள் பார்க்க ஆகும் செலவுத் தொகை ரூ.54,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். /2022/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 79, நாள்: 25.08.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 13</u>

சாத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள வாகனம் TN 67 AH 6760 டிப்பர் வாகனமாக உள்ளது. அதனை தொட்டி பொருத்தி டிப்பர் வாகனமாக மாற்றும் பணி செய்ய 11.08.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

<u>ஒப்பந்தபுள்ளி விபரம்</u>

1. மூசா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், தென்காசி – ரூ.4,58,000/–
2. ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ், கூட்டகுளம் – ரூ.4,92,400/–

<u>அலுவலக குறிப்பு:</u>

பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி வரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள மூசா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், தென்காசி நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண். 362/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 80, நாள்: 25.08.2022**
**தீர்மானம் : மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 14</u>

சாத்தூர் நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்ல்ஸ் திருநெல்வேலி மூலமாக 01.09.2021 முதல் 31.08.2022 வரை பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஒப்பந்தகாலம் முடிவடையும் நிலையில் உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் நகராட்சிகளில் உள்ள குடிநீர் பணி, பாதாளச் சாக்கடை பணிகள், பொது சுகாதார பணிகள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் தனியார் நிறுவனங்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை பார்ப்பதற்கு நிரந்தர பணியாளர்கள் எவரும் இல்லாத நிலையில் அரசினால் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரரை நியமனம் செய்யும் வரை ஏற்கனவே பார்த்து வரும் ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்ல்ஸ் திருநெல்வேலி நிறுவனத்திற்கு மூன்று மாதங்களுக்கு மட்டும் கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பார்த்து வரும் ஒப்பந்தக்காரருக்கே மூன்று மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேலும் 2021–2022–ம் ஆண்டிற்கு ஏற்கனவே நிர்ணயம் செய்யயப்பட்ட விலைவிகிதத்திற்கே பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மூன்று மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்தாலும் அரசினால் இடைப்பட்ட காலத்தில் தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் உரிமம் வழங்கும் பட்சத்தில் பழைய ஒப்பந்தகாரர் மறுப்பு ஏதும் தெரிவிக்காமல் தமது ஒப்பந்த காலத்தினை முடித்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.957/2019/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 81, நாள்: 25.08.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 15**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண். 126 நாள்: 28.11.2018 உள்ளாட்சி அமைப்புகளில் புதிய பாதாள சாக்கடை செயல்படுத்தும் நகராட்சிகளில் திட்டம் முடிவடைந்தவுடன் அனைத்து குடியிருப்பு கட்டிடங்களுக்கும் இணைப்புகள் வழங்கும் பொருட்டு அதற்கான முன்வைப்பு தொகை மற்றும் இணைப்பு கட்டணத்தினை 10 தவணை முறையில் வசூல் செய்ய அரசாணையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த 10 தவணை தொகையினை சொத்து வரி கேட்புடன் இணைத்து வசூல் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையின் படி சாத்தூர் நகராட்சியில் நடைபெற்று வரும் புதிய பாதாளச் சாக்கடை திட்டம் முழுமையாக முடிந்தவுடன் அனைத்து குடியிருப்பு கட்டிடங்களுக்கும் பாதாளச் சாக்கடை இணைப்பு வழங்கவும் அதற்கான கீழ்க்கண்ட வைப்பு தொகையினை சொத்து வரி கேட்புடன் இணைத்து 10 சம தவணை தொகையினை வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| கட்டிட பரப்பளவு சதுர அடியில் | வைப்புத் தொகை வீட்டு உபயோகம் |
|---|---|
| (1) | (2) |
| 500 ச.அடி | ரூ. 4000/– |
| 501 – 1200 ச. அடி | ரூ. 5000/– |
| 1201 – 2400 ச.அடி | ரூ. 7000/– |
| 2401 –க்கு மேல் | ரூ. 8000/– |
| சிறப்பு இனம் | – |

அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட தவணை தொகையினை குடிசை பகுதிகளுக்கு மட்டும் 10 சம தவணையாக பிரிவினை செய்து இணைப்பு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இணைப்புதாரர்கள் நகராட்சிக்கு முன் வைப்பு தொகையினை செலுத்தி நகராட்சியின் அனுமதி பெற்று நகராட்சி பொறியாளர்கள் முன்னிலையில் தாமே இணைப்பினை இணைத்து கொள்ளலாம் அல்லது நகராட்சி பொறுப்பில் இணைப்பு வழங்கும்பட்சத்தில் அதற்கான இணைப்பு கட்டணம் மற்றும் வைப்பு தொகையினை செலுத்திய பின் நகராட்சியினால் இணைப்பு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2053/2006/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 82, நாள்: 25.08.2022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 16**

நகராட்சி நிர்வாக துறையின் மானிய கோரிக்கை எண்.22 நாள்: 07.04.2022 சாத்தூர் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையத்தினை சீரமைப்பதற்கான திட்ட அறிக்கையினை சமர்ப்பிக்க அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன் பொருட்டு பழைய பேருந்து நிலையத்திற்கு திட்ட மதிப்பீட்டினை தயார் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணையில் கோவில்பட்டி நகராட்சி பொறியாளர் மற்றும் உதவி பொறியளார் அவர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அதன் பொருட்டு பழைய பேருந்து நிலையத்திற்கு கோவில்பட்டி நகராட்சி பொறியாளரால் திட்ட மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்திற்கு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதனை கண்காணிப்பு குழுவினால் (Monitoring Committee) ஆய்வு செய்து 2022–2023–ம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கண்ட பணியினை எடுத்து செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

அலுவலக குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.288/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 83, நாள்: 25.08.2022**
**தீர்மானம் : மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 17**

சாத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் வாறுகாலில் அடைப்புகளை தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள 22.07.2022–ம் தேதி அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | வாகன விபரம் | விலைவிகிதம் திரு.முத்துசாமி ஒப்பந்தக்காரர் | விலைவிகிதம் திரு.குருசாமி ஒப்பந்தக்காரர் |
|---|---|---|---|
| 1 | JCB | 750/ Hour | 900/ Hour |
| 2 | Hitachi | 1200/ Hour | 1300/ Hour |
| 3 | Tipper Lorry | 3000/ Day | 3300/ Day |
| 4 | Tractor | 3000/Day | 3200/Day |
| 5 | Diesel for Tipper & Tractor | 3000/Day | 3000/Day |
| 6 | Driver Beta for JCB | 500/Day | 600/Day |
| 7 | Driver Beta for Hitachi | 800/Day | 1000/Day |
| 8 | Driver Beta for Tipper & Tractor | 600/Day | 700/Day |
| 9 | Helper Beta | 1000/Day | 1200/Day |

அலுவலக குறிப்பு:

கூடுதல் அரசு செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி உடன் பணியினை மேற்கொள்ள வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைவாக அளித்துள்ள திரு.முத்துசாமி அவர்களின் விலைப்புள்ளியினை இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உடன் வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.519/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 84, நாள்: 25.08.2022**

**தீர்மானம் : மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 18**

இந்நகராட்சியில் பணிபுரியும் ஆணையாளர் மற்றும் பணியாளர்கள் அலுவலக நிமித்தமாக வெளியூர் சென்று வருவதற்கு அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டபடி பயணப்பட்டியல் 2022–2023ம் ஆண்டிற்கான தொகையினை பணியாளர்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.200/2011/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 85, நாள்: 25.08.2022**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 19**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கட்டுப்பாட்டில் இயங்கி வரும் **1)** வாகன எண். TN 67Z 4628-ற்கு வாகனம் தகுதிச்சான்று பெற பதிவு கட்டணம், புகைபரி சோதனை கட்டணம், வட்டார போக்குவரத்து அலுவலகம், விருதுநகர் செல்ல டோல்கேட் கட்டணம் ஆகியவைகள் சேர்த்து ரூ.**2,210/–**ம் பழுது பார்ப்புச் செலவு ரூ.**1,100/–**னையும் திரு.ஜெயக்குமார், ஓட்டுநர் அவர்களுக்கு வழங்கவும்,

**2)** பொது சுகாதாரப் பிரிவு வாகன எண்.TN 67BJ 8661-ற்கு தகுதிச்சான்று பில் தொகை ரூ.**650/–**, புகை சான்று பெறுவதற்கு ரூ.**150/–**, வெள்ள நிவாரண பணிக்கு தூத்துக்குடி செல்லும் போது டோல்கேட் செலவுத் தொகை ரூ.**300/–** மேற்படி தொகையினை திரு.கா.இராமநாதன், ஓட்டுநர் அவர்களுக்கு வழங்கவும்,

மேற்படி **1** மற்றும் **2**ல் குறிப்பிட்டுள்ள தொகையினை ஓட்டுநர்கள் தன் செலவிலிருந்து செலவழித்துள்ளதால் அச்செலவுத் தொகையினை இதர செலவினத்திலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் திரு.சு.ஜெயக்குமார், ஓட்டுநருக்கு செலவுத் தொகை மொத்தம் ரூ.**3,310/–** மற்றும் திரு.கா.இராமநாதன், ஓட்டுநருக்கு செலவுத் தொகை ரூ.**1,100/–**னையும் வழங்க அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.54/2021/எச்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 86, நாள்: 25.08.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச. குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**